# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 248/ந/2025
நாள் 01.08.2025

திரு. B. ஸ்ரீனிவாசன்
மானாமதுரை, சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மானாமதுரை நகராட்சி, சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, கன்னார் தெரு கதவு எண். 296 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. ஸ்ரீனிவாசன் என்பவரின் 25.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2025 அன்று பெறப்பட்டு, 248/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, கன்னார் தெரு கதவு எண். 296 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. ஸ்ரீனிவாசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:-

"தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் அளிக்கப்பட்ட மனுவிற்கு மானாமதுரை நகராட்சி ஆணையாளர் சட்டத்திற்கு புறம்பாக பதில் அளித்தது.

முதலாவது மேல் முறையீட்டில் மண்டல இயக்குநர் அவர்கள் இதுநாள் வரை எவ்வித பதிலும் அனுப்பாமல் சட்டத்திற்கு புறம்பாக இருந்துள்ளார்." என தெரிவித்துள்ளார்.

2) மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேலாளர், மானாமதுரை நகராட்சி அவர்களின் 25.02.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 145/2025/சி1 (த.அ.உ.ச.ப. எண். 108/2025/சி1) மூலம் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியதற்கான கடித நகல் மனுதாரரின் ஆவணமாகப் பெறப்பட்டுள்ளது.

3) மனுதாரரின் புகார் மனு மற்றும் புகார் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேலாளர், மானாமதுரை நகராட்சி அவர்களால் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் மனுதாரருக்கு வழங்கப்பட்ட கடிதம் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேலாளர், மானாமதுரை நகராட்சி அவர்களால் வழங்கப்பட்டுள்ள விவரம் மானாமதுரை நகராட்சி அலுவலகக் கடிதம் ந.க.எண். 145/2025/சி1 (த.அ.உ.ச.ப.எண்.108/2025/சி1), நாள் 25.02.2025–ல் இருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், மானாமதுரை நகராட்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேலாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள பதில் மனுதாரருக்கு திருப்தி அளிக்காதபட்சத்தில், மேல்முறையீட்டு அலுவலரிடம் முறையீடு செய்து தீர்வு காண வேண்டும். அவ்வாறு மேல்முறையீட்டு அலுவலரின் பதிலும் மனுதாரருக்கு திருப்தி அளிக்காதபட்சத்தில், மாநிலத் தகவல் ஆணையத்தில் முறையீடு செய்து தீர்வு காண வேண்டும் என்பதால், மனுதாரரின் புகார் மனுமீது இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை எழவில்லை எனவும், இப்புகார் மனு விசாரணைக்கு ஏற்ககூடியதல்ல என்பதால் மனுதாரரின் மனுவை நிராகரிக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 1–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. B. ஸ்ரீனிவாசன்,
எண்.296, கன்னார் தெரு,
மானாமதுரை,
சிவகங்கை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
மானாமதுரை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

4/8/25
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

4/8/25